1978 செப்டம்பர் 14]

பெரியகுளம் பேருந்து நிலையம்.

*வினா எண். 212—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவுசெய்து விடையளிப்பாரா :

(அ) பெரியகுளம் நகரத்திலுள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) தனியார் நிலங்களை வாங்க ரூ. 2·6 இலட்சம் கடன் கோரி நகராட்சி தனி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட செயற்குறிப்பின் மேல் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்ற பின் விரிவான திட்ட மதிப்பீடுகளுடன் கடன் விண்ணப்பத்தை புதுப்பிக்குமாறு அரசு, நகராட்சி தனி அலுவலரைக் கேட்டுள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றி வருகின்ற ஒவ்வொரு கமிஷனரும் ஒவ்வொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த பஸ் நிலையத்தை அவர்கள் இஷ்டப்படி எடுத்துக் கொள்ளலாம் என்று திட்டம் தீட்டிக் கொள்ளுகிறார்கள். எந்த இடத்தில் அந்த பஸ் நிலையத்தைக் கட்ட அரசு சிபாரிசு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 22–6–1978-லே நமது வீட்டுவசதி அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்த இடத்தைப் பார்த்து அதைப் பற்றிய வரைபடத்தை அனுப்பச் சொல்லி தனி அதிகாரியைக் கேட்டார்கள். அந்த வரைபடமும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதை ஒட்டி அரசு அதை அணுகும்.

திருவண்ணாமலை பேருந்து நிலையம்.

*வினா எண். 213—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேலை துவங்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?